Registered as a Newspaper

ஆண்டு 10
ஆண்டு 11

விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1-25

Y RL H'LL
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
O L விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்
மீண்டும் வகுப்புகள் ஆரம்பம்
(வழமையான நேர அட்டவணை)
23-6-87 செவ்வாய்
மாலை 2-30 மணி

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸூ ஆனி மீ 8 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 24 (22 — 06 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 177

# வெள்ளைமாளிகை முன் தமிழர் ஆர்ப்பாட்டம்

★ ஸ்ரீலங்காவுக்கான உதவியை நிறுத்துக!
★ அமெ. எம். பிக்களை தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்புக!!

வாஷிங்டன், ஜூன் 22

ஸ்ரீலங்கா அரசிற்கான அமெரிக்க உதவிகளை நிறுத்தக் கோரி வெள்ளை மாளிகைக்கு அருகில் நூற்றுக் கணக்கான ஈழத் தமிழர்கள் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

அமெரிக்க நாடாளுமன்றக் குழு ஒன்றை தமிழர் வாழும் வட பகுதிக்கு அனுப்பி உண்மை நிலையை அமெரிக்க அரசு அறிந்து கொள்ளவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தமிழருக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளவே அமெரிக்க உதவிகளை ஸ்ரீலங்கா அரசு உபயோகித்து வருவதாக அவர்கள் குற்றம் சுமத்தினர்.

இலங்கையின் இராணுவ நடவடிக்கைகள் பலவற்றுக்கு அமெரிக்க ஆதரவு சக்திகளே உதவியளித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது, (உ-எ)

## முச்சந்தி முரளி



அத்தாட்சிப் பத்திரங்களை வேண்டி, பாத்து யோசிச்சே உவை இராமண்ணுமார் நடந்து கொள்ளப் போகினம்!

## ★ சென்னையில்
## எம்.ஜி.ஆர்.தேறுகிறார் அமெ. பயணம் ரத்து

சென்னை, ஜூன் 22

தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனின் உடல் நலம் தேறி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவரைப் பார்ப்பதற்காக பிரதமர் ராஜீவ் காந்தி சென்னைக்கு மேற்கொள்ள இருந்த பயணம் இரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

சுகவீனம் காரணமாக நேற்று திரு. இராமச்சந்திரன் அமெரிக்கா கொண்டு செல்ல மேற்கொள்ளப்படவிருந்த ஏற்பாடுகளும் கைவிடப்பட்டன என்று தெரிய வருகிறது. (உ-எ)

## திருமலையில் புலிகள் கண்ணிவெடித் தாக்கு! இரு சிப்பாய்கள் பலி!!

சனிக்கிழமையன்று காலை திருகோணமலை 3 ஆம் கொலனியில் தாம் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும், ஒருவர் படுகாயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

சென்ரி பார்ப்பதற்காக வந்த 6 இராணுவத்தினர் மீதே தாம் இந்தத் தாக்குதலை நடத்தியதாக விடுதலைப் புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றனர். (உ)

## பொத்துவிலில் மினிமுகாம் மீது தாக்கு
### மூவர் பலி; இருவர் காயம்

கடந்த சனிக்கிழமை இரவு பொத்துவிலில் உள்ள இராணுவ மினிமுகாம் ஒன்றைத் தாம் தாக்கிச் சேதப்படுத்தியதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டதாகவும், இருவர் காயமடைந்ததாகவும் புலிகள் தமது அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றனர். (உ)

## வவுனியாவில் இளைஞர் பலர் கைது
### விசாரணையின் பின் விடுவிப்பு

வவுனியா நகரில் நேற்று ரோந்து சென்ற சிப்பாய்கள் நகரில் நடமாடிய பல இளைஞர்களைக் கைதுசெய்து தலையாட்டிமுன் நிறுத்தினர்.

காலை பத்துமணியளவில் கவச வாகனங்களிலும், டிரக்குகளிலும்வந்த நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் நகரைச் சுற்றி வளைத்தனர்.

கடைகளிலும், பஸ் நிலையங்களிலும் நின்ற பல இளைஞர்கள் சிப்பாய்களினால் கைதுசெய்யப்பட்டு டிரக்கினுள் இருந்த தலையாட்டி முன் நிறுத்தப்பட்டனர். சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன் பின்னர் இரண்டு பேர் தடுத்து வைக்கப்பட்டனர். ஏனையோர் விடுதலை செய்யப் பட்டனர். (உ-10)

## 2ஆவது நாளாக ஊரடங்கு

யாழ் குடாநாட்டில் இரண்டாவது நாளாக ஞாயிற்றுக்கிழமை (நேற்று) மாலை 6 மணி தொடக்கம் இன்று திங்கள் காலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்.

— இப்படி யாழ்ப்பாணம் வானொலி நேற்று அறிவித்தது.

## சுபநேரம்
22-06-1987
திங்கட்கிழமை
சுபநேரம்:-
11.54 முதல் 1.24 வரை
ராகுகாலம்:-
7.24 முதல் 8.54 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

## ஒரு மாத கால நிவாரண உணவு

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடமராட்சிமக்களுக்கு ஒரு மாதத்திற்கான இலவச நிவாரண உணவுப் பொருள்களை வழங்க அரசஅதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை தெல்லிப்பளை, கோப்பாய் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டுவார காலத்துக்கு இலவச உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (உ-10)

## வடமராட்சி மக்கள் திரும்பிச்செல்ல அச்சம்

வல்வெட்டித்துறை, ஜூன் 22

வடமராட்சிப் பகுதியிலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்த மக்கள் அங்கு சென்று மீளக் குடியேற அஞ்சுகின்றனர்.

திடீர், திடீரென சிப்பாய்கள் நடத்தும் தேடுதல் வேட்டைகளினாலும், முள்ளி முகாமினூடாகப் பயணம் செய்யும் பயணிகளை பணயக் கைதிகளாக வைத்து சிப்பாய்கள் வெளியேற முயல்வதுமே இதற்கான காரணங்களாகும். (உ-எ,160)

## காரைநகர் மக்கள் இடம் பெயர்வு

காரைநகர், ஜூன் 22

சனிக்கிழமை மாலையில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதை அடுத்து காரைநகர்ப் பகுதிக்குப் பலதடவைகள் ஹெலிக்கொப்டர்கள் வந்து சென்றதால் அப்பகுதி மக்கள் பதற்றமடைந்து தமது இடங்களை விட்டு இடம்பெயர்ந்தனர்.

குறிப்பாக பலிகாடு, கருங்காலி, தங்கோடைப் பகுதிகளைச்சேர்ந்த இளைஞர்கள், மாணவர்கள் அயற் கிராமங்களை நோக்கிச் சென்றனர்.

[மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்](உ-73)

## முதல் கப்பலில் வரும் நிவாரணப் பொருள்கள்

சென்னை, ஜூன் 22

இந்தியா வழங்கும் நிவாரண உதவிகளை ஏற்றிக்கொண்டு முதலாவது கப்பல் திட்டமிட்டபடி நாளை மறுதினம் (புதன்கிழமை) சென்னையில் இருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும்.

இந்தக் கப்பலில் கொண்டுவரப்படவுள்ள பொருள்களின் விவரம் வருமாறு:—

★ 3 ஆயிரம் தொன் அரிசி.
★ 50 தொன் மா.
★ 50 தொன் சீனி.
★ 10 தொன் பருப்பு.
★ 3 ஆயிரம் பொதிகளில் மருந்து வகைகள்.
★ 6 ஆயிரம் லீற்றர் மண்எண்ணை.
★ துணி வகைகள்.

மற்றும் உப-உணவுப் பொருள்கள், சமையல் எண்ணை.

நிவாரணப் பொருள்களை ஏற்றுவதற்கான கப்பல் அந்தமானின் போர்ட் பிளேயர் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு இன்று திங்கட்கிழமை சென்னைத் துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது. (உ-எ)

## வடமராட்சியில் கைதாகி
## விடுதலையானோருக்கு அத்தாட்சிப் பத்திரம்
### இணைப்பதிகாரி உறுதி

வல்வெட்டித்துறை, ஜூன் 22

வடமராட்சியில் கைதாகி விடுதலையானோருக்கு விசேட அத்தாட்சிப் பத்திரங்களை வழங்க இணைப்பதிகாரி உறுதி அளித்திருக்கிறார்.

வடமராட்சியில் கைதாகி பூஸா கொண்டு செல்லப்பட்டபின் விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களுக்கு விடுதலையானது குறித்து எந்தவித அத்தாட்சிப்பத்திரங்களும் வழங்கப்படவில்லை.

இதனால் அந்த இளைஞர்கள் மீண்டும் கைதாகும் வாய்ப்பு உண்டு என்று உதயனில் கடந்த புதனன்று செய்தி வெளியாகியிருந்தது.

வடமராட்சி இராணுவ இணைப்பதிகாரியை பெற்றோர்கள் கடந்த வெள்ளியன்று சந்தித்தனர்.

அப்போது இராணுவ இணைப்பதிகாரியிடம்
(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை அங்கீகரிக்க கோரி உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

அராலி வடக்கு குலனை வைரவர்ஆலயம், அராலி மேற்கு ஞானியார் கோவில் ஆகிய ஆலயங்களிலும் கொக்குவில், தாவடிப் பிள்ளையார் கோவிலிலும் நேற்றுக் காலை முதல் மாலைவரை உண்ணாவிரதம் இடம் பெற்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலிகளையும் அங்கீகரிக்கக் கோரியும் —

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கவேண்
(4 ஆம் பக்கம் பார்க்க)

## நூறுக்கும் அதிகமான ப.நோ.கூ.ச. கிளைகள் வடமராட்சியில் சேதம்

யாழ்ப்பாணம், ஜூன்22

வடமராட்சிப் பகுதியில் இராணுவம் நடத்திய தாக்குதல்களை அடுத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நூற்றுக்கும் அதிகமான கிளைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டு இருக்கின்றன.

உடுப்பிட்டிப் பகுதியில் மட்டும் 30 கிளைகளும், பருத்தித்துறையில் 33 கிளைகளும் உடைக்கப் பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்களினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றிய விவரங்களை அரச அதிபர் கோரியிருக்கிறார்.

இதே வேளை நேற்று யாழ்செயலகத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டது (உ-10)

## பேச்சுக்கு வந்து அரசின் நிலையை பரீட்சிக்கட்டும்
### காமினி சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 22

டிசம்பர் 19 யோசனைகளில் இருந்து ஸ்ரீலங்கா அரசு பின்வாங்கிவிட்டதா? என்பதை பேச்சுவார்த்தை மேசைக்கு வந்து பரீட்சிக்க வேண்டும்.

—காணி அமைச்சர் காமினி திஸநாயக்கா இப்படி தெரிவித்தார்.

'த ஐலண்ட்' இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பேட்டி வருமாறு:

கேள்வி: டிசம்பர் 19 யோசனைகளில் இருந்து அரசு பின்வாங்கி விட்டதாகப் பலரும் கூறுகின்றார்களே?

அமைச்சர்: பேச்சுவார்த்தைக்கு வந்துதான் இதனை ஒருவர் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.
(4 ஆம் பக்கம் பார்க்க)



காமினி

# தமிழர் பிரச்சினை இப்போது பிராந்திய விவகாரம்; அதனால் இந்திய ஆதரவு தமிழருக்கு தேவை

## ஈரோஸ் இரத்தினசபாபதி அளித்த பேட்டி

கொழும்பு, ஜூன் 22

தமிழர் பிரச்சினை இப்போது ஸ்ரீ லங்காவின் உள்நாட்டுப் பிரச்சினையல்ல. அது இந்தப் பிராந்தியத்திற்கே உரிய பிரச்சினையாக மாறிவிட்டது.

அதனால் அதில் தலையிட இந்தியாவுக்கு உரிமை உண்டு. இந்தவேளையில், இந்திய ஆதரவு தமிழருக்குத் தேவை.

—இப்படி ஈரோஸ் அரசியல் பிரிவுத் தலைவரும் ஸ்தாபகருமான திரு. இரத்தினசபாபதி தெரிவித்தார்.

கொழும்பு நாளிதழ் 'த ஐலண்ட்' ஞாயிறு பதிப்புக்கு அளித்த பேட்டியிலேயே திரு. இரத்தினசபாபதி இப்படிக் கூறினார்.

பேட்டியின் சில அம்சங்கள் வருமாறு:-

கேள்வி: டிசம்பர் 19 யோசனை அடிப்படையில் பேச்சுக்களை மீண்டும் நடத்தும்படி இந்தியா கேட்டுள்ளதே. பேச்சுக்களுக்கு போக நீங்கள் தயாரா?

பதில்: டிசம்பர் 19 யோசனைகளை நாம் இன்னும் பார்க்கவில்லை. ஸ்ரீலங்கா அரசோ, இந்திய அரசோ அந்த யோசனைகளை எமக்குத் தரவில்லை.

எமது மக்களின் சுய கௌரவம், நீதி அடங்கிய அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைப்பதற்கான எந்தப் பேச்சுக்களிலும் கலந்து கொள்வதை நாம் எதிர்க்கவில்லை.

தமிழரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திட்டவட்டமான யோசனைகளை முன்வைப்பது ஸ்ரீலங்கா அரசின் பொறுப்பாகும்.

### ஸ்ரீலங்கா திடமாக இல்லை

கேள்வி: பிரதமர் காந்தி 'நன்றாக உள்ளது' என்று சொன்ன பின்னரும் கூட யோசனைகளை கண்ணை மூடிக் கொண்டு தீவிரவாதிகள் நிராகரித்து விட்டனர் என்பதல்லவா ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாடு.

பதில்: எனது அறிவுக்கு எட்டியபடி, ஸ்ரீலங்கா அரசு தான் டிசம்பர் 19 யோசனைகளில் உறுதியாக இல்லை.

இப்பொழுது கூட
(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் 1,750 குடும்பங்களை மீளக் குடியமர்த்த முடிவு

## முற்பணமாக ரூ. 8 லட்சம் ஒதுக்கீடு

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சியில் கடந்த 86 ஆம் ஆண்டு ஜூன் நான்காம் திகதி முதல் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக திருநகர், கணேசபுரம், கனகபுரம் ஆகிய இடங்களை விட்டு வெளியேறிய சுமார் ஆயிரத்து 750 குடும்பங்களை மீளக் குடியமர்த்த் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக புனர்வாழ்வு அமைச்சு சுமார் 8 லட்சம் ரூபாவை முற்பணமாக கிளிநொச்சிக் கச்சேரிக்கு அனுப்பி வைத்துள்ளது.

இவ்வாறு மீளக் குடியமர்த்தப்படும் குடும்பங்களுக்கு முதல் கட்டமாக ஊக்குவிப்புப் பணம் ஆயிரம் ரூபாவும், அத்துடன் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு ஆயிரம் ரூபாவும், நெற்செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு ஆயிரத்து ஐநூறுரூபாவும் வழங்கப்படும்.

திருநகரிலிருந்து இடம் பெயர்ந்த சுமார் 1500 குடும்பங்களுக்கும், கணேசபுரத்திலிருந்து இடம் பெயர்ந்த 120 குடும்பங்களுக்கும் கனகபுரத்திலிருந்து இடம் பெயர்ந்த 120 குடும்பங்களுக்கும் இவ்வுதவி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இவ் அசம்பாவிதத்தில் இடம் பெயர்ந்த இரத்தினபுரம், பரவிப்பாஞ்சான் ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் எனவும்-

மீளக் குடியமர்த்தப்படுபவர்களுக்கு ஏனைய மாவட்டங்களில் வழங்கப்பட்டது போன்று நிவாரணமாக மூன்று மாத உணவும், சமையல் பொருள்கள் வாங்கவும் வீடு திருத்தவும் நிதியும் மேலதிகமாக வழங்க வேண்டும் என கிளிநொச்சிப் பிரசைகள் குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளது.

(உ-76)

★★★★★★★★ சின்னஞ்சிறு விளம்பரம் ★★★★★★★

**சேவை**

சேலைகள் அச்சிடுதல், ஊதயல் வேலைகள் புதிய பழைய கிளை ஸ்தாபனங்கள் விளம்பரப் படுத்தும் அறிவித்தல்களை எழுதவும் பழைய சேலைகளுக்குப் புதுப்பொலிவுடன் தேவையான டிசைன்களில் அச்சிடுவதற்கும் நவீன ஊதயல் வேலைகளைச் செய்யவும், கோவில் திரைச் சீலை விளம்பரச் சீலைகளைத் தேவையான விதத்தில் எழுதவும், பாதுகாப்பான சூழலில் அமைந்த இடம்.

வசந்தா ரெக்ஸ்ரைல்ஸ் 42, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 1434)

பாதிப்புற்ற

# 46 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள்

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சியில் அண்மைக்கால அசம்பாவிதங்களின்போது வீடுகளை இழந்த சுமார் 46 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்கும் முயற்சியில் கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டுள்ளது.

''ஒக்ஸ்பாம்'' நிறுவனத்திடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட சுமார் ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபா பணத்திலேயே இத்தற்காலிக வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இவற்றை நிர்மாணிப்பதற்கென கிளிநொச்சி அரசாங்க அதிபர் கே. தேவசிகாமணி அவர்களின் முயற்சியால் பளையிலிருந்து கிடுகுகள் கிளிநொச்சிக்கு எடுத்துவரப் பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் பரவிப்பாஞ்சான் என்னுமிடத்தில் ஆறு வீடுகளும், இரத்தினபுரத்தில் ஒரு வீடும், கோவிந்தன் கடைச்சந்தியில் எட்டு வீடுகளும், திருநகரில் 16 வீடுகளும், கணேசபுரத்தில் 2 வீடுகளும், கனகபுரத்தில் 2 வீடுகளும், ஜெயந்திநகரில் 13 வீடுகளும் கட்டிக்கொடுக்கப்படும்.

இங்குள்ள ஏழை விவசாயிகளுக்கு 750 மண்வெட்டி, 750 கோடரி என்பனவற்றைப் பெற்றுக் கொடுக்கவும்—

ஊற்றுப்புலத்தில் சுமார் 25 கிணறுகளை வெட்டவும் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், ஒக்ஸ்பாம் நிறுவனத்திடமிருந்து உதவி கோரி உள்ளதாக கழகத்தின் செயலாளர் திரு. எஸ். சிவராஜலிங்கம் தெரிவித்தார். (உ-76)

## அதிபர்கள் கூட்டம்

மானிப்பாய், ஜூன் 22

மானிப்பாய் வட்டாரப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பாடசாலைகளின் இன்றைய நிலை, மாணவர்- ஆசிரியர்கள் வரவு, சுற்றுநிருபங்கள், அகதிகள் புனர் வாழ்வு நிதி சேகரித்தல் போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்படும். (உ-90)

## ★இந்தக் கேள்விக்கு என்ன குறை?

கொழும்பு, ஜூன் 22

கிழக்கு மாகாணத்தில் தமிழர், உயிருக்கும் உடைமைக்கும் போராடுகின்றனர்.

இந்த நேரத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதா?

இப்படி சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் அரசுத் தலைமைப்பீடத்தைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

திரு. தேவநாயகமே அந்த அமைச்சர் என்று அரசியல் வட்டாரங்களில் கூறப்பட்டது (உ-எ)

## வீடுகள் எரிக்கப்பட்டன

காங்கேசன் துறை, ஜூன் 22

வீமன்காமம் கொலனி வீடமைப்புத்திட்டத்தில் இருந்த பல வீடுகள் உடைக்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டு உள்ளதாக அறியப்படுகிறது.

வீமன்காமம் வெங்காயச் சங்க சுற்றுடலில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் பலாலிக்குச் சென்று வருவதற்கு வசதியாகவும் பாதுகாப்புக் கருதியும் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. (உ-68)

# 'போலியோ' பாதித்த இளைஞர் மீது படையினருக்கு வந்த சந்தேகம்!

## பூஸாவிலும், முகாமிலும் ஏற்பட்ட அனுபவம்!!

காங்கேசன் துறை, ஜூன் 22

சிறுவயதில் ''போலியோ'' நோய் ஏற்பட்டதால் காலில் பாதிப்புற்ற இளைஞர் ஒருவர் வடமராட்சியில் இராணுவத்தினரிடம் அகப்பட்ட போது—போராளிகளின் பாசறையில் பயிற்சி பெற்றதாக சந்தேகிக்கப்பட்டு கடும் சித்திர வதைக்குள்ளானார்.

மயிலிட்டி திருப்பூர் ஒன்றியத்தைச் சேர்ந்த குணபாலசிங்கம் செல்வச் சிவகுமாரன் (ரவி) 19 வயது என்பவருக்கே இக்கதி நேர்ந்தது.

பூஸாவில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ள இவ் இளைஞர் உடுவிலிலுள்ள அகதி முகாம் ஒன்றில் தங்கியுள்ளார்.

அவர் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

மயிலிட்டி திருப்பூர் ஒன்றியத்தில் வசித்து வந்த நான், மயிலிட்டியில் ஏற்பட்ட பதற்றத்தினால் பொலிகண்டிக்கு இடம் பெயர்ந்து உறவினர் வீடொன்றில் தங்கியிருந்தேன்.

கடந்த 26 ஆம் திகதி திடீரென ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அதனால் அல்வாய் பூவாகரைப் பிள்ளையார் கோவிலில் தஞ்சமடைந்திருந்தவர்களுடன் நானும் சென்று தஞ்சமடைந்தேன்.

29ஆம் திகதி அங்கு வந்த இராணுவம் 17 தொடக்கம் 30 வயது வரையுள்ளவர்களை தம்முடன் அழைத்துச் சென்றனர்.

### கோவிலில் இருந்தோம்

கோயிலில் இருந்தவர்கள் சுமார் 600 பேருடன் என்னையும் அவர்கள் அழைத்துச் சென்றனர்.

எங்களை திக்கம் பகுதிக்கு அழைத்துச் சென்ற இராணுவத்தினர் மூன்று மூன்று பேராக கைகோர்த்து வெயிலில் நிற்க வைத்தனர். பின்னர் எங்களை கீழே வீழ்த்தித் தாக்கினர்.

எங்களுக்கு தண்ணீர்த் தாகம் ஏற்பட்ட போது அவர்களிடம் தண்ணீர் கேட்டோம்.

அவர்கள் சேற்றுத் தண்ணீரை அள்ளிக் குடிக்கத் தந்தார்கள்.

பின்னர் எல்லோரையும் வல்வெட்டித்துறை முகாமுக்குக் கொண்டு சென்று முகாமிலிருந்த கம்பிக்கூட்டுக்குள் அடைத்து வைத்தனர்.

மூன்று தினங்களாக எதுவித உணவோ, குடிக்கத் தண்ணீரோ இன்றி அடைந்து கிடந்தோம்.

மலசலம் கழிக்கக்கூட வெளியே விடவில்லை. கூட்டுக்குள்ளேயே நாம் மலசலம் கழித்தோம்.

அச்சமயம் என்னுடன் இருந்த பலர் மயங்கி வீழ்ந்தனர்.

மூன்று தினங்களின் பின் எங்களுக்கு கை விலங்கு மாட்டி கப்பல் ஒன்றிற்குக் கொண்டு சென்றனர்.

### கடல்நீர் குடித்தோம்

அப்பொழுது தாக மிகுதியால் கடல் நீரை அருந்தினோம்.

மூன்று இரவுகள் கப்பலில் பிரயாணம் செய்து பூஸா முகாமுக்குக் கொண்டு செல்லப் பட்டோம்.

எனக்கு சிறு வயதில் போலியோ வந்ததால் காலில் பாதிப்புள்ளது.

என்னுடன் கைதான பலரை விசாரணை செய்து விடுதலை செய்ய முடிவு செய்தனர்.

என்னை மட்டும் பல்வேறு சித்திரவதைகளுக்கு உட்படுத்தினர். தலையாட்டிமுன் என்னை நிற்க வைத்தனர்.

பின்னர் பூஸாவிலிருந்து என்னை ஏனையோருடன் விடுதலை செய்வதற்காக கப்பலில் கொண்டு வந்து பருத்தித்துறை முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

அங்கிருந்து விடுதலை செய்வதற்காக புலோலி மினி முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு நின்ற இராணுவத்தினர் என்மீது சந்தேகங் கொண்டு திரும்பவும் என்னைக் கைது செய்து இருமணி நேரம் தலைகீழாகக் கட்டித் தூக்கித் தாக்கினார்கள்.

புலிகளின் பாசறையில் பயிற்சி பெற்ற போது விபத்தில் சிக்கியதால் எனது கால் பாதிப்புற்றிருப்பதாக அவர்கள் சந்தேகித்து மீண்டும் மீண்டும் என்னைத் தாக்கினார்கள்.

அவ்வாறு நான் பயிற்சி எதுவும் பெறவில்லை என்றும்—

நான் கடற்றொழில் செய்து வந்தேன் என்றும் கூறியபோது அவர்கள் அதனை நம்பவில்லை.

புலோலி மினி முகாமில் தாக்குதலால் நான் மயங்கி வீழ்ந்தேன்.

பின்னர் மயக்கம் தெளிந்தபோது திரும்பவும் தாக்கினார்கள்.

என்னுடன் கைதான எனது மைத்துனர் இரத்திலசிங்கம் தர்மகுலசிங்கம் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டதால் அவர் எனது நிலையை உறவினரிடம் தெரிவித்தார்.

உறவினர்கள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபரிடம் தொடர்பு கொண்டு விடயத்தைத் தெளிவுபடுத்தினார்கள்.

பின்னர் உதவி அரசாங்க அதிபர் இராணுவ அதிகாரியிடம் தொடர்பு கொண்டு என்னை விடுதலை செய்யுமாறு கோரியதை அடுத்தே நான் விடுதலை செய்யப் பட்டேன்.

பொலிகண்டியில் நான் தங்கியிருந்த வீட்டில் வைக்கப்பட்டிருந்த எனது மீன்பிடி வலைகள், உபகரணங்கள் யாவும் தீயிட்டுக் கொளுத்தப் பட்டுள்ளன— இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ-68)

தள்ளி 'ஸ்டாட்' செய்த பின்னர்

# டிராக்டரில் பாய்ந்து ஏற முற்பட்டவர் நசியுண்டு மரணம்

கொடிகாமம், ஜூன் 22

டிராக்டர் ஒன்றை தள்ளி ''ஸ்ராட்'' செய்தபின்னர் அதில் பாய்ந்து ஏற முற்பட்ட விவசாயி ஒருவர், தவறி விழுந்து டிராக்டர் சில்லினுள் நசியுண்டு மரணமானார்.

இந்தப் பரிதாப சம்பவம் விஸ்வமடுவில் நடைபெற்றது.

விஸ்வமடுவில் விவசாயம் செய்யும் மீசாலை வாசியான ம. ஏரம்பமூர்த்தி (வயது 47) என்பவரே இப்படி மரணமானார். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை.

இந்தச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

சம்பவதினம் காலையில் தனது 13 வயது மகனை டிராக்டரில் இருந்து ''ஸ்டாட் செய்யுமாறு'' கூறிவிட்டு இவர் பின்னால் நின்று அதனைத் தள்ளினாராம்.

அவரது மகனுக்கு டிராக்டரை 'ஸ்டாட்' செய்வதிலோ, ஓட்டுவதிலோ பழக்கம் ஏதும் இருக்கவில்லை.

டிராக்டர் ஸ்டார்ட் செய்ததும் அது வேகமாக நகர ஆரம்பித்தது. அதனைத் தடுத்து நிறுத்துவதற்காக தகப்பனார் டிராக்டரில் பாய்ந்து ஏற முற்பட்டாராம். முயற்சி தவறியதால் அவர் தவறி விழுந்து டிராக்டர் சில்லினால் நசியுண்டார்.

உடனடியாக கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கும் பின்னர் அங்கிருந்து சாவகச்சேரிக்கும் எடுத்துச் செல்லப்பட்ட அவர் அங்கு மரணமானார்.

சாவகச்சேரி மரண விசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் மரணம் தொடர்பான விசாரணையை நடத்தினார்.

விபத்து மரணமென தீர்ப்பளிக்கப்பட்டது. (உ-75)

## புதிய அதிபர் நியமனம்

வேலணை, ஜூன் 22

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய திரு.சு. சண்முகநாதன் இம்மாதம் தொடக்கம்வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்தியமகா வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பாடசாலையின் அதிபராகவும் வேலணை கொத்தணி அதிபராகவும் கடமையாற்றிய திரு. எம். சிவராஜரத்தினம் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (உ-167)

பிரசாவுரிமை பெற்ற

# மலையகத் தமிழர்கள் வாக்களிக்க முடியாத நிலை

கொழும்பு, ஜூன் 22

அடுத்த மாதம் நடத்தப்படவிருக்கும் உள்ளூராட்சி, பிரதேச சபைத் தேர்தல்களில் பிரசா உரிமை பெற்ற மலையகத் தமிழர்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவர்களுக்கு இன்னும் வாக்குரிமை வழங்கப் படவில்லை.

வாக்குரிமை கோரி இவர்கள் விண்ணப்பித்தும் இவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெறவில்லை.

இவர்கள் எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்க முடியாது என்பதை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா ஊர்ஜிதம் செய்தார். (உ-எ)

# சிறுபோக நெற்செய்கை பெரிதும் பாதிப்பு

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வரட்சி காரணமாகவும்தண்ணீர் பற்றுக்குறை காரணமாகவும் இம்முறை சிறுபோக நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

சுமார் 895 ஏக்கரில் மட்டும் சிறுபோக நெற்செய்கை இம்முறை மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ளது.

இதன்படி கல்மடுக் குளத்தின்கீழ் சுமார் 225 ஏக்கரிலும் —

கனகாம்பிகைக் குளத்தின்கீழ் 30 ஏக்கரிலும்—

கந்தன்குளத்தின் கீழ் 55 ஏக்கரிலும்—

புதுமுறிப்புக் குளத்தின்கீழ் 215 ஏக்கரிலும்—

அக்கராயன் குளத்தின் கீழ் 310 ஏக்கரிலும் —

வன்னேரிக்குளத்தின் கீழ் 60 ஏக்கரிலும் — நெற்செய்கை மேற்கொள்ளப்படும்.

இதேவேளை வடமாகாணத்தில் மிகப் பெரிய குளமான இரணைமடுவில் நீர்மட்டம் மிகவும் குறைந்துள்ளது.

இதனால் இம்முறை இக்குளத்தின்கீழ் வழமையாக மேற்கொள்ளப்படும் சுமார் 25 ஆயிரம் ஏக்கர் சிறுபோக நெற்செய்கை முற்றாகத் தடைப்பட்டுள்ளது. (உ-76)

# விதி அவர்களை தொடர்ந்துதுரத்துகிறது

முள்ளியவளை, ஜூன் 22

திருமலையைச் சேர்ந்த 17 குடும்பங்களை விதி தொடர்ந்து துரத்துகிறது.

இவர்கள் திருமலையில் இருந்து அகதிகளாக பருத்தித்துறையில் உள்ள தம்பசிட்டியில் தங்கி இருந்தனர்.

அண்மையில் வடமராட்சிப் பகுதியில் இடம் பெற்ற வன்செயல்களால் அங்கிருந்து அகதிகளாக வெளியேறினர்.

கால்நடையாக குடத்தனை சென்று, அங்கிருந்து மீண்டும் கால்நடையாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாத்தளன் சென்று தங்கினர்.

முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் இவர்களுக்கான நிவாரண உதவிகளைச்செய்து கொடுத்தனர்.

இவர்கள் தற்போது மீண்டும் கால்நடையாக புதுக்குடியிருப்பை நோக்கி செல்கின்றனர்.

எங்கு போய் தங்குவது என்று தெரியாது பெண்கள், வயோதிபர், குழந்தைகள் உட்படபலர் நடந்து சென்றுகொண்டிருக்கின்றனர். (இ-ள-96)

## 44 பேர் மீது சதிக்குற்றம்

கொழும்பு, ஜூன் 22

அரசைக் கவிழ்க்க சதி செய்ததாக 44 பேர் மீது குற்றஞ்சாட்டப்படவிருக்கின்றது.

அடுத்த மாதம் 15ஆம் திகதி குற்றப்பத்திரிகைகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

சந்தேக நபர்களில் ஒருவர் இன்டிகா குணவர்த்தன. இவர் மகரகம எம். பி. தினேஷ் குணவர்த்தனவின் தம்பி; அமரர் பிலிப் குணவர்த்தனவின் மகன். (உ-எ)

# காரைநகரில் துருப்புகள் குவிப்பு?

யாழ்ப்பாணம், ஜூன் 22

கடந்த சனிக்கிழமை மாலை பெரும் எண்ணிக்கையான துருப்பினர் காரைநகர் கடற்படை முகாமிற்குக் கொண்டு வந்து குவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துருப்புகளைக்கொண்டு வந்து இறக்குவதற்காக ஹெலிக்கொப்டர்கள் அடிக்கடி காரைநகர் கடற்படைத் தளத்தில் வந்து தரையிறங்கிச் சென்றன.

சனிக்கிழமை மாலை முழுவதும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. (உ)

## ஆஸ்பத்திரி இயங்குகிறது

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலினால் சேதமுற்ற அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை கடந்த புதன்கிழமை தொடக்கம் வழமை போலச் செயற்படுகின்றது.

அரசினர் வைத்திய சாலையின் புதிய கட்டடம், பிரசவவிடுதி என்பன பலத்த சேதமுற்றுள்ளன. (உ-எ)

## கிழக்கிற்கும் நிவாரணம்

இந்திய நிவாரண உதவி கிழக்கு மாகாணத் தமிழருக்கும் கிடைக்கக் கூடியதாக விஸ்தரிக்கப் படவேண்டும் என்ற கோரிக்கை புதுடில்லி அரசின் தீவிர பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பல முகாம்களில் சுமார் பத்தாயிரம் தமிழ் அகதிகள் தங்கியிருக்கின்றனர். (உ-எ)

★ HORIZON ENTERPRISES ★

**பிரயாண ஒழுங்குகள்**

✱ டுபாய் ✱ குவைத் ✱ சவூதிஅரம்கோ கொம்பனி

டிரைவர் விமானநிலையக்கிளீனர் ஹொஸ்பிடல்கிளீனர்

சமையற்காரர் H. V. டிரைவர் தச்சுவேலை

பணிப்பெண்கள் மேசன்

சிங்கப்பூர் பணிப் பெண்கள்

குறைந்த கட்டணத்தில் வயதெல்லை 17 - 35

மற்றும் அனைத்து மத்தியகிழக்கு நாடுகளுக்கான வெற்றிடங்கள் மிக அதிகளவில் எம்மிடம் இருப்பதால தாமதமின்றி தொடர்பு கொள்ளவும். தற்போதைய நாட்டு நிலமை காரணமாக எம்முடன் தொடர்பு கொண்டு நாம் முதல் தடவையில் அவர்களை கொழும்பு அழைத்துச் சென்று மீண்டும் யாழ் திரும்பாது எமது பாதுகாப்புடன் சகல வசதிகளும் நிறைந்த எங்கள் சொந்த வதிவடத்தில் வைத்து மிகத்துரித கதியில் பயணம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதையும் உண்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். எந்தக் காரணம் கொண்டும் முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. எமது முகவர் நிலையத்தினால் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரம் அடுத்த வாரம் வெளியிடப் படும். மற்றும் எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் கிடைக்கும். உங்கள் கடவுச்சீட்டுக்கள் [ PASS PORT ] குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

A. பத்மதாஸ்
இல. 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

HORIZON ENTERPRISES
No. 87, 2/1, 2nd Floor,
Kollupitiya Lane,
COLOMBO - 3.
Telephone: 574000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

கடவுள் மனிதனுக்கு அருளிய நியாயம் இவன் தன்னை அறியவும், தனக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பை அறியவுமாம்.

— டால்ஸ்ராய்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
22.6.1987 த.பெ.இல: - 23

# கழுதைக்கு உபதேசம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஸ்ரீலங்கா அரசாங்கம் மீண்டும் குண்டு வீச்சுத் தாக்குதலை ஆரம்பித்துவிட்டது!

கடந்த மாத இறுதியில் வடமராட்சியில் ''ஒப்பறேஷன் லிபறேஷனை'' நடத்தி, தனது காட்டுமிராண்டித்தனத்தை அரசு காட்டி இருந்தது.

அந்த வரலாற்றுப் பயங்கரம் குறித்து உலகின் பல திசைகளுக்கும் தெரியவந்ததும் அதனை மெதுவாக நிறுத்திக்கொண்டது.

எனினும் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில், விமானத் தாக்குதல் உட்பட இராணுவ நடவடிக்கைகளைத்தொடர்ந்தது. இந்தியாவின் ''ஒப்பறேஷன் பூமாலை'' யால் உண்டான மனஉளைச்சலைப்பிரதிபலிப்பதற்காக இம்மாதம் ஏழாம் திகதியும் விமானத் தாக்குதலை அரச படைகள் நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர், ஏதோ ஒருவித உந்துதலால், இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுவிட்டதாக பந்தோபஸ்து அமைச்சர் இம்மாதம் பத்தாம் திகதி அறிவித்திருந்தார். வெளிவிவகார அமைச்சர் ஜனுப் சாஹுல் ஹமீதும் அதனை ஊர்ஜிதம் செய்திருந்தார்.

அவர்கள் அவ்வாறு தெரிவித்திருந்த போதிலும் முகாம்களில் இருந்து ஷெல் அடிப்பதும், கடலில் பீரங்கிப் படகுகளில் இருந்து வேட்டு வைப்பதும், ஹெலித்தாக்குதல் நடத்துவதும் தொடர்ந்து வந்தன. குண்டு வீச்சு மட்டும் நிறுத்தப்பட்டிருந்தது.

அந்தோ! இராணுவத் தாக்குதல் நிறுத்தப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்ட பத்து நாட்களில் கடந்த சனிக்கிழமை மாலை யாழ்ப்பாண நகரத்திலும், உடுவிலிலும், மூர்க்கத்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதுவும் வெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஹமீத், புதுடில்லியில் வைத்து, இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க இந்தியாவின் மத்தியஸ்தத்தை ஏற்பதற்கு ஸ்ரீலங்கா தயாராக இருப்பதாக அறிவித்த 24 மணி நேரத்திற்குள் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. வழமை போலவே, போராளிகளுக்கோ அல்லது அவர்களது உடைமைகளுக்கோ பெரும் பாதிப்பும் இல்லாமல் பொதுமக்கள் உடைமைகளும், இரண்டு பாடசாலைகளும் சனிக்கிழமைத் தாக்குதலால் சேதம் அடைந்திருக்கின்றன.

வடமராட்சியில் மிகப் பெரிய அளவிலான இராணுவத் தாக்குதலை நடத்தியதற்கு, பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி, வெளிநாட்டுப் பத்திரிகைகள், செய்தி ஏஜன்சிகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகையான வெவ்வேறு காரணங்களைக் கூறி வந்தார். ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் முக்கிய பேச்சாளராக, ஒலிபெருக்கியாக விளங்கி வரும் அவர் தமது வாய்க்கு வந்ததை எல்லாம் காரணமாகத் தெரிவித்திருக்கிறார்.

அதே மாதிரி மீண்டும் குண்டு வீச்சு ஆரம்பிக்கப்பட்டதற்கும் அவர் எது எதையோ எல்லாம் சொல்லக்கூடும்.

வடமராட்சியில் அறுநூறுக்கும் மேற்பட்ட தமிழ் மக்களை இரத்தப் பலி எடுத்தும் அரசாங்கத்துக்கு அதன் இரத்தவெறி இன்னும் அடங்கிவிடவில்லை. போராளிகளைத் தேடி அழிப்பதாகக் கூறிக்கொண்டு அப்பாவித் தமிழ் மக்களை அழிக்கும் அதன் இலட்சியம் இன்னமும் முற்றுப் பெறவில்லை. எந்த நிலையிலும் தமிழ் இன ஒழிப்பை நிறுத்துவதற்கு அரசாங்கத்துக்கும், அதன் படைகளுக்கும் விருப்பமில்லை.

கடந்த நான்கு வருடங்களாக ஆயிரம் ஆயிரமாய் அப்பாவித் தமிழ் மக்களை அழித்தும் அவர்களது ஆதிக்க வெறி இன்னும் தீரவில்லை.

இவற்றையே அரசாங்கம் சில நாள் இடைவெளி விட்டு விட்டு நடத்தும் பெரும் இராணுவத் தாக்குதல்கள் புலப்படுத்துகின்றன.

பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதைக் கடத்திக் கொண்டு, தமிழ் இன அழிப்பை கனகச்சிதமாகத் தொடர்வதுதான் ஸ்ரீலங்கா அரசின் திட்டமாக இருக்கிறது.

இதனை நன்கு புரிந்து கொள்ளாத வெளிநாடுகள், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் உகந்தது என்று புத்திமதி கூறி வருகின்றன! இந்தியா போன்ற சில நாடுகள் ஸ்ரீலங்காவுக்கு அதனை ஓர் ஆலோசனையாகவும் சொல்லி வருகின்றன.

அந்தப் புத்திமதி கழுதைக்குப் புரிந்த உபதேசமாகவே முடியும் என்பதை அவை இன்னமும் புரிந்து கொள்ளாதது கவலைக்கு உரியது.

கழுதைக்கு உபதேசம் காதிலே ஓதினாலும் அவலக் குரல், அவலக்குரலேதான்!

---

ஹரியாணா தோல்வியை அடுத்து

# மாநில முதல்வர்கள் பலருக்குகல்தா?

## ராஜீவ் ஆலோசனை

புதுடில்லி, ஜூன் 21

ஹரியாணா தோல்வியைத் தொடர்ந்து இந்திரா காங்கிரஸ் கட்சியில் பெரிய மாற்றங்களைக்கொண்டுவர பிரதமர் ராஜீவ்காந்தி தீர்மானித்து இருக்கின்றார்.

இந்திரா காங்கிரஸ் ஆட்சி நடத்தும் மாநிலங்கள் சிலவற்றின் முதலமைச்சர்களை பதவியில் இருந்து விலக்கிவிட்டு புதியவர்களை நியமிப்பது குறித்தும் திரு. காந்தி, காங்கிரஸின் மூத்த தலைவர்களுடனும் தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லி அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி. பி. சி. இத்தகவலை வெளியிட்டது.

ஹரியாணா தோல்விக்கு ஹரியாணா காங்கிரஸ் பிரிவுதான் காரணம் என்று பிரதமர் காந்தி தெரிவித்து இருக்கிறார்.

ஹரியாணா காங்கிரஸில் இருந்துவந்த உட்பூசல்கள்தான் இவ்வளவு மோசமான தோல்வியைக் கொண்டுவந்தன என்றும் அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார். (உ-எ)

## பஞ்சாப்பின் முன்னாள் முதல்வரும் பாராட்டு

புதுடில்லி, ஜூன் 21

யாழ்குடா தமிழருக்கு விமானமூலம் உணவுப் பொதிகள்போட்ட இந்தியாவின் நடவடிக்கையை பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் தர்பராசிங் பாராட்டி இருக்கின்றார்.

உலக விவகாரம் பற்றிய இந்தியக் கவுன்ஸில் நடத்திய கருத்தரங்கில் திரு தர்பராசிங் பேசினார். (இ-எ)

## தமிழருக்கு விருது

மணிலா, ஜூன் 21

இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் கே. சுவாமிநாதனுக்கு உலக உணவு விருது கடந்த வெள்ளியன்று மணிலாவில் வைத்து வழங்கப்பட்டது.

உலக உணவு ஸ்தாபனத்தில் கடமையாற்றும் தமிழரான டாக்டர் சுவாமிநாதன் நெல் அபிவிருத்தி தொடர்பாக பல ஆராய்ச்சிகளையும், சாதனைகளையும் புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## தென்கொரியாவில் பதற்றத்தைத் தணிக்க அமெரிக்கத் தூதர்

வாஷிங்டன், ஜூன் 21

கலவரங்களினால் பாதிக்கப்பட்டுள்ள தென்கொரியாவுக்கு விசேட தூதுவர் ஒருவரை அமெரிக்கா சனிக்கிழமை அவசரமாக அனுப்பி வைத்தது.

கூடுதல் ஜனநாயக வழிகளை புகுத்தும்படி தென்கொரிய அரசுக்கு ஆலோசனை கூறவே விசேட தூதர் அனுப்பப்பட்டிருப்பதாக அமெரிக்க அரசுப் பேச்சாளர் சார்ள்ஸ் றெட்மன் தெரிவித்தார்.

ஜனாதிபதியை மக்கள் நேரடியாகத் தெரிவு செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சிகள், மாணவர் அமைப்புக்கள் கடந்த 11 தினங்களாக சோலிலும் மற்றும் நகரங்களிலும் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றன.

இந்த ஆர்ப்பாட்டங்களைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக இராணுவ ஆதரவுடன் ஆட்சி நடத்தும் ஜனாதிபதி சன்-டு-வான் அறிவித்திருக்கிறார்.

இந்த எச்சரிக்கையைப் புறக்கணித்து எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த எதிர்க்கட்சிகள் முனைந்துள்ள நேரத்திலேயே அமெரிக்காவின் விசேட தூதர் அங்கு விரைகின்றார். (உ-எ)

## சீனா - பாக் பேச்சுவார்த்தை

இஸ்லாமபாத், ஜூன்21

சீனப் பிரதமர் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்களை நடத்த பாகிஸ்தான் சென்றிருக்கின்றார்.

சனிக்கிழமை அவர் இஸ்லாமபாத் போய்ச் சேர்ந்தார். (உ-எ)

## வளைகுடாப்போரை முடிவுக்கு கொண்டுவர ஐ. நா. நடவடிக்கை

வாஷிங்டன், ஜூன்21

வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய நடவடிக்கைகளை எடுப்பதில் ஐ நா. ஈடுபட்டிருக்கின்றது.

இதுசம்பந்தமான நகல் தீர்மானம் ஒன்றை ஐ. நா. தலைமை அலுவலகம் தயாரித்துள்ளது.

அத்தீர்மானத்தின்படி வளைகுடா யுத்தத்தை உடனே நிறுத்தும்படி ஈரான், ஈராக் நாடுகள் கேட்டுக்கொள்ளப்படும்.

இதற்கு இரண்டுநாடுகளும் செவி சாய்க்காத பட்சத்தில் இந்த இரண்டு நாடுகளுக்கும் ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதை நிறுத்தும்படிமற்ற நாடுகளுக்கு ஐ. நா. வேண்டுகோள்விடுக்கும்.

இந்த நகல் தீர்மானத்தை ஐ. நா. பாதுகாப்புச்சபையில் உள்ள நிரந்தர உறுப்பு நாடுகள் கொண்டுவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

**வெளி உலகில்**

பதவி கவிழ்க்கப்பட்ட

## ஷார்ஜா சுல்தானிடம் மீள ஆட்சிப் பொறுப்பு

ஷார்ஜா, ஜூன் 21

பதவி கவிழ்க்கப்பட்ட சுல்தான் மீண்டும் ஷார்ஜா ராஜதானியின் அரசு பொறுப்பை ஏற்றிருக்கின்றார்.

புரட்சி நடத்திய அவரின் தம்பி, முடிக்குரிய இளவரசராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

வளைகுடாவில் உள்ள ஏழு ஷேக் ராஜதானிகள் கொண்ட அமைப்பான ஐக்கிய அரபு எமிரேட்சுகளின் உயர்சபை இந்த இணக்கத்தைக் கண்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸினுள் ஷார்ஜாவும் அடங்குகிறது என்பது தெரிந்ததே.

மீண்டும் சுல்தான் பதவியை ஏற்றுள்ள ஷேக் முகமது மின்காசிம் அல்கஷாமாயின் கீழ் முடிக்குரிய இளவரசராக ஷேக் அப்துல் அஸீஸ் பணியாற்றுவார்.

ஆனால் உள்நாட்டு விவகாரங்களில் கூடுதல் அதிகாரம் பெற்றவராக ஷேக் அப்துல் அஸீஸ் இருப்பார்.

இந்த இணக்கத்தின் மூலம் ஷார்ஜா பதற்றம் சமாளிக்கப்பட்டு விட்டது. (உ-எ)

## ரஷ்யாவில் இந்திய ஓவியங்கள்

தஞ்சாவூர், ஜூன் 21

சோவியத் யூனியனில் நடைபெறும் இந்திய விழாவில் தஞ்சாவூர், மைசூர் ஓவியங்கள் கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

இந்த ஓவியங்கள் 15, 16, 17, 19 ஆம் நூற்றாண்டு காலத்தவை.

இந்திய விழா, மாஸ்கோவில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோரால் கூட்டாக அங்குராப்பணஞ் செய்து வைக்கப்படும். (உ-எ)

## தீப்பந்த ஊர்வலம்

வரி உயர்வைக் கண்டித்து பங்களாதேஷில் கடந்த சனிக்கிழமை தீப்பந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

எதிர்க்கட்சிகள் கூட்டணி இந்த ஊர்வலத்தை ஒழுங்கு செய்திருந்தது. (உ-எ)

## அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு!

மாஸ்கோ, ஜூன் 21

ரஷ்யப் புரட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது.

ரஷ்ய ஜனாதிபதி மன்னிப்பு அளிக்கும் உத்தரவை வெளியிட்டிருக்கிறார்.

தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் இந்த மன்னிப்புத் திட்டத்தின் கீழ் விடுவிக்கப்படுவர்.

நீண்ட கால சிறைத் தண்டனை அனுபவிப்பவர்களின் தண்டனைக் காலம் குறைக்கப்படும். (உ-எ)

---

# தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்பதன் மூலம் அரசியல் தீர்வு

## தெற்கு மக்களை வலியுறுத்தக் கோரிக்கை

தமிழர் பிரச்சினை பற்றி ஸ்ரீலங்கா நான்கு ஆண்டுகளாக இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்தி வந்தது.

அரசியல் தீர்வு காணுவதில் தனக்கு நாட்டம் இருப்பதாக ஸ்ரீலங்காவும் இதுகாலவரை காட்டிவந்தது.

கடைசியாக இராணுவத்தீர்வு காண்பதில் உள்ள ஆர்வத்தையே ஸ்ரீலங்கா காட்டியிருக்கின்றது.

அண்மையில் யாழ் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் அதையே வெளிப்படுத்துகின்றன.

இதற்காக கடந்த நான்கு ஆண்டுகளும் தந்திரமாக இராணுவத்தைப் பலப்படுத்துவதில் ஸ்ரீலங்கா ஈடுபட்டு வந்தது.

இஸ்ரவேல், பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய பிற்போக்கு நாடுகளில் இருந்து பயிற்சியாளர்களையும் ஸ்ரீலங்கா இறக்குமதி செய்தது.

இன்று தமிழ் மக்கள் மீது தரை, ஆகாயம், கடல் பகுதிகளில் இருந்து காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை ஸ்ரீலங்கா அரசு ஆரம்பித்திருக்கின்றது.

இதில் உயிரிழந்த அப்பாவிகளின் எண்ணிக்கை ஐந்நூறைத் தாண்டியுள்ளது.

தென் இலங்கையில் உள்ள தொழிலாளர் வர்க்கம், இடதுசாரி இயக்கம் ஆகியன இதனை எதிர்க்காதது வெட்கக்கேடானது.

சூயஸ் கால்வாய் மீது பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் அரசு விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது. இதை எதிர்த்து தொழிற் கட்சி பெரும் ஆர்ப்பாட்டங்களை லண்டனில் நடத்தியது.

லெபனான் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஜெரூசலத்தில் ஆர்ப்பாட்டங்கள் 1982 இல் நடத்தப்பட்டன.

வியட்நாம் யுத்தத்தின் போது அமெரிக்காவுக்கு எதிராக இயக்கம் நடத்தப்பட்டது.

ஆனால் ஸ்ரீலங்காவில், தென் இலங்கையில் உள்ள மக்கள் வடபகுதிச் சகோதரர்கள் மீது நடத்தப்படும் குண்டுத் தாக்குதலை எதிர்த்து சுண்டு விரலையாவது உயர்த்தி எதிர்ப்புத் தெரிவித்தார்களா?

மக்களின் ஒரு பகுதியினர் மீது ஸ்ரீலங்கா அரசு நடத்தும் புத்தி அற்ற, மனிதத்தன்மை அற்ற தாக்குதலை சர்வதேச ரீதியிலான புரட்சிகரக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாம் கடுமையாக எதிர்க்க வேண்டும்.

ஸ்ரீலங்கா இது காலவரை முகம் கொடுக்காத மோசமான பிரச்சினையாக தமிழர் பிரச்சினை அமைந்திருக்கின்றது.

மீண்டும் மீண்டும் பதவிக்கு வந்த சிங்கள ஆதிக்க அரசாங்கங்களினால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பாரபட்ச நடவடிக்கைகளின் பலன்தான் தமிழர் பிரச்சினை.

இப்பாரபட்ச நடவடிக்கைகளுக்குத் தெரிவிக்கப்பட்ட அமைதி வழியான எதிர்ப்புக்கள் பலனளிக்காத நிலையில்தான் தமிழ் இளைஞர் ஆயுதப்போராட்டத்தில் இறங்கினர்.

இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும்; இராணுவத் தீர்வு காணப்பட முடியாது.

★ தமிழர்களைக் கொல்வது நிறுத்தப்பட வேண்டும்.

★ இராணுவம் வாபஸ் வாங்கப்பட வேண்டும்.

★ எல்லா பிற்போக்குச் சட்டங்களையும் ரத்துச் செய்யவேண்டும்.

★ அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

★ பிரிந்து போகக் கூடிய நிலையை ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவுக்குச் சென்றாவது தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அரசியல் தீர்வுகாண வேண்டும்.

—இவைகளை நிறைவேற்றுவதன் மூலம் தான் அரசியல் தீர்வைக் காண முடியும்.

நாட்டின் ஒற்றுமையை பாதுகாக்க இதுவே ஒரே வழி.

சிங்கள மக்கள் மத்தியில் உள்ள புரட்சிகர சக்திகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இதே சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து பிற்போக்குவாத யூ. என். பி. அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும்.

தமிழரும் சிங்களவரும் ஏற்கக் கூடிய தீர்வு ஒன்றுக்கான அடிப்படையை இதன் மூலம் மட்டுமே நாம் உருவாக்க முடியும். ★ (உ-எ)

வடபகுதிச் சகோதரர்கள் குண்டு வீச்சுக்கு இலக்காகி அழிவதை எதிர்த்து தென் இலங்கையில் உள்ள மக்கள் சுண்டு விரலை உயர்த்தியாவதுஎதிர்ப்புக்காட்டி இருக்கின்றார்களா?

கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில்இப்படிக் கேட்சுப்பட்டுள்ளது.

அறிக்கை முழுமையாக இங்கு பிரசுரமாகின்றது.

---

## மாவை ஆலயம் குறித்து பேச்சு

காங்கேசன்துறை, ஜூன் 22

மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில் பகுதியில் இராணுவம் நிலை கொண்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி ஆதீனகுரு சு. து. சண்முகநாதக் குருக்களுடன் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம், செயலாளர் திரு. இ. தவகோபால் ஆகியோர் கலந்துரையாடினர்.

ஆலயத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் தகாத சம்பவங்கள் குறித்தும் அவர்கள் கவலை வெளியிட்டனர். (உ-68)

## விண்ணப்பங்கள் விநியோகம்

காங்கேசன்துறை, ஜூன்22

வலி வடக்குப் பகுதியில் ஒரு வார இலவச உணவு வழங்கும் திட்டத்திற்கான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

மல்லாகத்தில் வைத்து விநியோகிக்கப்படும் இந்த விண்ணப்பப் படிவங்களை ஏராளமான மக்கள் பெற்றுச் செல்கிறார்கள். (உ-68)

**சமய சந்நிதிகளில்**

## தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணம் கந்தர் மடம், பழம்றோட் ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் தேர் வெள்ளோட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும். காலை 8-30மணிக்கு பெருமான் பவனிவருவார்.

இத்தேர் ஆறுமுகம் சிற்பாலயம் விஸ்வஸ்ரீ ஆ. ஜீவரட்ணம் அவர்களால் உருவாக்கப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## சங்காபிஷேகம்

சாவகச்சேரி, ஜூன் 22

சாவகச்சேரி கச்சாய் வீதியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு வீரபத்திரர் கோவிலில் கடந்த வெள்ளியன்று சங்காபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து அலங்கார மகோற்சவத் திருவிழா நடைபெற்று பத்தாவது தினமான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திருவூஞ்சல் திருவிழா நடைபெறும். (உ-75)



**பொய்யாமொழி**

**குறள்:**
அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

**பொருள்:**
(செய்யும் செயலை முடிப்பதற்கு வேண்டிய) கருவிகளுடன் ஏற்ற காலத்தையும் அறிந்து செய்தால், அரிய செயல்கள் என்பவை உண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCE

SHABRA

நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்

SHABRA UNICO FINANC LTD.


# உதயன்

22 — 06 — 1987 திங்கட்கிழமை


YOUR FRIENDS IN FINANCE

SHABRA

நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்

SHABRA UNICO FINANCE LTD.

## வெளிநாட்டு முதலீடுகள் பல இனப்பிரச்சினையால் பாதிப்பு

### உலக வங்கி அறிக்கை

பாரிஸ், ஜூன் 22

ஸ்ரீ லங்காவில் நிலவும் இனப்பிரச்சினையினுல் அந்நாட்டில் வெளி நாட்டு முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதில் பெரும் தாக்கம் ஏற்பட்டிருக்கிறது.

உலக வங்கி ஸ்ரீ லங்காவுக்கு உதவும் 14 நாடுகள் அமைப்புக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

உதவும் நாடுகள் கூட்டம் இம்மாதம் 25-ஆம் திகதி பாரிஸில் நடைபெறவுள்ளது.

50 கோடி டாலர் (ஏறத்தாழ சுமார் ஆயிரம் கோடி ரூபா) உதவியை ஸ்ரீலங்கா அரசு இந்த நாடுகளிடம் கோரியுள்ளது.

உலக வங்கி தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது;

உள்ளூர்த் தொழில் முதலீடுகளில் இனப்பிரச்சினையால் ஏற்பட்ட பாதிப்புக்களை மதிப்பிடுவது கஷ்டமான காரியமாக உள்ளது.

ஸ்ரீ லங்கா அரசினுல் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களின்கீழ் முதலீடு செய்வதும் 1984ஆம் ஆண்டுக்குப் பின்னர் வெகுவாகக் குறைந்துள்ளது.

சுதந்திர வர்த்தக வலயத்தில் முதலீடு 150 கோடி ரூபாவாக உச்சத்தில் முன்னர் இருந்தது. 1983இல் அது 20 கோடி ரூபாவாக வீழ்ச்சி அடைந்தது. பின்னர் அந்த வீழ்ச்சியில் இருந்து நாடு மீளவே இல்லை.

நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்செய்ய ஸ்ரீ லங்கா அரசு சில சீர்திருத்தங்களை அவசரமாக பரிசீலனை செய்ய வேண்டும்.

—இப்படி உலக வங்கியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ–எ)

## தேர்தல் எதிலும் தமிழர் பங்குபற்ருர்

### சென்னையில அமிர் கருத்து

சென்னை, ஜூன் 22

ஸ்ரீலங்கா அரசு நடத்தும் உள்ளூராட்சித் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிப்பர்.

–இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

தமிழரின் உரிமைப் போராட்டத்தை இராணுவத் தீர்வின் மூலம் அடக்கிவிட ஸ்ரீலங்கா அரசு முனைந்துள்ளது.

அதே நேரத்தில் தேர்தல்களை தமிழ்ப் பகுதிகளில் நடத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேர்தல் பற்றிச் சிந்திக்கும் நிலையில் தமிழர் இல்லை. கூட்டணியும் தேர்தலில் போட்டியிடாது.

### புலிகளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்று கோரியும் அப்பகுதி மக்களால் இந்த உண்ணுவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

இதே கோரிக்கைகளை முன்வைத்து இன்று இணுவில் கந்தசுவாமி கோவிலடியிலும் உண்ணுவிரதம் நடைபெறவிருக்கிறது. (உ–எ–10)

## விம்பிள்டன் போட்டி இன்று ஆரம்பம்

லண்டன், ஜூன் 22

நூற்றியோராவது விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் இன்று இங்கிலாந்தில் ஆரம்பமாகின்றன.

உலகநாடுகள் பலவற்றைச் சேர்ந்த திறமை மிக்க வீரர்கள் 108 பேர் இந்தப் போட்டியில் பங்குபற்றுகின்றனர்.

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த 19 வயது இளைஞர் போரிஸ் பேக்கர் மூன்ருவது தடவையாக இம்முறையும் சாம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக்கொள்வார்என எதிர்பார்க்கப்படுகிறது.

மகளிர் பிரிவில் சாம்பியன் பட்டத்தை தொடர்ந்து 8 ஆவது வருடமாகத் தக்க வைத்துக் கொள்ளுவதற்கு மார்ட்டினு நவற்றி யோலா முயற்சிப்பார்.

இந்தியவீரர்களான விஜய் அமிர்தராஜ், ரமேஷ் கிருஷ்ணன் ஆகியோர் இந்தப் போட்டியில் பங்கு பற்றுகின்றனர். (உ)

### விடுதலை--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோர்கள் 'உதயன்' செய்திபற்றி குறிப்பிட்டுக் கூறினர்.

அதற்குப் பதிலளித்த இணைப்பதிகாரி, தாம் மந்திகை பொலீஸ் நிலையம் ஊடாக, கைதாகி விடுதலையானவர்களுக்கு அதற்கான அத்தாட்சி அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (உ–எ–160)

## கரையோர பகுதியில் படகுகள் ரோந்து!

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். கோட்டை, மண்டைதீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, கொழும்புத்துறை கடற்பகுதிகளில் பீரங்கிப் படகுகளின் ரோந்துச் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேபகுதிகளில் ஐந்து பாரிய கப்பல்களும் கடலில் நங்கூரமிட்டுள்ளன.

பீரங்கிப் படகுகள் கரையை நோக்கி வருவதும் பின்னர் திரும்பிச் செல்வதும் அடிக்கடி நடைபெற்று வருகிறது.

இதேவேளை கடற்படையினரின் உதவியுடன் கோட்டை இராணுவத்தினர் சில கரையோரப் பகுதிகளை கைப்பற்ற முயலலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (உ–10)

## கைப்பற்றிய துணிகளை தருமம் செய்த அரச படையினர்!

யாழ்ப்பாணம், ஜூன் 22

நயினுதீவில் கரை ஒதுங்கிய ஒரு படகில் இருந்ததாகக் கூறப்படும் பெறுமதிமிக்க உடுபுடைவைகள் கடற்படையினரால் அங்குள்ள பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

நேற்று இலங்கைக் கடற்பிராந்தியத்தில் காணப்பட்ட இந்தப் படகை கடற்படையினர் துரத்தி வந்ததாகக் கூறப்படுகிறது.

அதிவேகமாக இந்த வள்ளத்தைச் செலுத்தி வந்த படகோட்டிகள் படையினரைக் கண்டதும் கடலுள் பாய்ந்து தப்பிச் சென்றதாகவும்–

இதனையடுத்து கரை ஒதுங்கிய இப் படகில் இருந்து பல இந்தியச் சாரங்கள், சேர்ட்டுகள் என்பவற்றைக் கைப்பற்றிய கடற்படையினர், அவற்றை அப்பகுதி பொதுமக்களுக்கு விநியோகித்ததாகவும் கூறப்படுகிறது. (உ–10)

## மாதகல் பகுதியில் கடற் பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 22

பண்டத்தரிப்பு, மாதகல் பகுதிகளை நோக்கி நேற்று கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தினர்.

அதிகாலை வேளையில் நடத்தப்பட்ட இந்த அகோரத் தாக்குதலினுல் பல வீடுகள் சேதமடைந்தன.

நித்திரையில் ஆழ்ந்திருந்த பொதுமக்கள் அச்சத்தினுல் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு ஆலயங்களுக்கும், பாடசாலைகளுக்கும் சென்று தஞ்சம் அடைந்தனர்.

முன்னர் ஏவப்பட்ட பீரங்கிக் குண்டுகளை விட நேற்றைய பீரங்கிக் குண்டுகள் வித்தியாசமான சத்தத்தை உடையவையாகவும், சக்தி மிக்கனவாகவும் இருந்தன. (உ–10)

### வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வண்ணூர்பண்ணை கிழக்கு கலட்டி ஸ்ரீ வீர கத்தி விநாயகர் ஆலய வருடாந்த சாந்தீக உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

இம்முறை அலங்கார உற்சவத்திற்குப் பதிலாக நாளாந்தம் காலை பத்து மணிக்கு ஸ்தாபன அபிஷேகமும், விசேட பூசைகளும் இடம் பெறும் என அறிவிக்கப்படுகிறது. (அ)

## வித்தாரம்

என்ன முரளியார்! இண்டைக்கும் நேற்றைய நேரத்துக்குத்தான் சைக்கிளை வீட்டுக்கு வெளியாலே எடுத்திருக்கிறீர் போலை!!

குடாநாட்டிலை ஒவ்வொருநாளும் ஊரடங்கு போட்டுக் கொண்டு இருக்கினம். என்ன காரணத்துக்கு எண்டது சனத்துக்குத் தெரியாது.

இருந்தால் போலை ஊரடங்கு போடுகினம். இருந்தால்போலை பொம்மராலை குண்டு போடுகினம். அவை நினைச்சதை எல்லாம் செய்யினம். உவைதானும் தமிழர் பகுதியளிலை ஜனநாயகத்தை நிலைநாட்டப் போகினம்.

தாங்கள் நினைச்சதைச் செய்யிறதுதான் ஜனநாயகம் எண்டு எண்ணிவிட்டினம். ஜனநாயகம் மட்டுமே? அளப்பு மன்னன் அச்சாணியார் தமிழ் பகுதியளிலை எலக்ஷனும் வைக்கப் போறதாக எல்லே சொல்லித் திரியிருர்.

தமிழ்ச்சனம் நிமிஷத்துக்கு நிமிஷம் நிம்மதி இல்லாமல் ஜீவ மரணப் போராட்டம் நடத்திறது கொழும்பிலை இருக்கிறவைக்கு எங்கே விளங்கப் போகுது. அந்த நிலையை உருவாக்கி அவை விளங்கினுலும் அப்பிடியே காட்டிக் கொள்ளுவினம்!

எங்கடை பகுதியளிலை சாதாரண வாழ்க்கை நிலை செத்து வருஷங்கள் பலவாய்ப் போச்சு. அவையிடை இராணுவ முகாம்கள் இஞ்சை வந்த பிறகு எந்தத் தமிழன் இஞ்சை நிம்மதியாய் நித்திரை கொள்ளுருன்?

இந்த லட்சணத்திலை கிழக்கிலேயே தேர்தல் வைக்க முடியாத நிலை. பிறகு வடக்கைப் பற்றியும் அவை வாய் கூசாமல் பேசுகினம். வடமராட்சியிலையாவது உவையள் தேர்தல் நடத்தக் கூடிய நிலை இருக்குமோ எண்டது பூஜ்யம். இப்ப புதுபுதுக் கைக்கு பொது மக்களோடை ஏதேனு தானேனு எண்டு நடக்கினமாக்கும். கொஞ்ச நாளிலை சுயரூபத்தைக் காட்டாமலேவிடுவினம்? அதுக்குள்ளை ஒரு எலக்ஷனும் தேவைப்படுகுது அவைக்கு!

எல்லாம் வெளி உலகத்தை ஏமாத்திக் கடன் வாங்கிறதுக்குத் தான் வேறை என்னத்துக்கு?

★ ★ ★

விஷயம் தெரியுமே? யாழ்ப்பாண மக்களுக்கு இந்தியா நிவாரண உணவுப் பொருள்களை ஏத்திக்கொண்டு முதலாவது கப்பல் சென்னையிலிருந்து நாளையிண்டைக்குப் புறப்படுகுதாம்.

முந்தி இராமேஸ்வரத்தில் இருந்து வந்த வள்ளங்களுக்குப் பதில் இப்ப கப்பல்களே வரப்போகுது!

யாழ்ப்பாணத்திலை மக்கள் உணவுப் பொருள் இல்லாமல் கஷ்டப்படுறதை ஸ்ரீ லங்கா அரசு ஒப்புக்கொண்டு பொருள்களை வழங்க அனுமதிச்சது ஒண்டே இந்தியாவுக்கு கிடைத்த பெரிய வெற்றி!

இதுக்கிடையிலை இஞ்சை இருந்து தமிழகம் போற அகதிகள் எண்ணிக்கை கூடிக்கொண்டு போறதாக அங்கிருந்து கிடைச்ச செய்தியள் தெரிவிக்குது.

அங்கை போனதுகளிலை அனேகர் 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் தானும். சின்னக் குழந்தையளோடை இளம் தாய்மாரும் போயிருக்குதுகள்.

மூண்டு மணி நேரத்திலை போக வேண்டிய வள்ளங்கள் 20 மணி நேரம் சுத்திச் சுத்தித் தான் இராமேஸ்வரம் போய்ச் சேருதுகள்.

மண்டபம் அகதிகள் முகாம் நிரம்பி வழியுது எண்டதாலை, இப்ப புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலையும் ஈழத்தமிழருக்கென அகதி முகாம்கள் போட்டிருக்கினமாம்.

## உள்ளூராட்சித் தேர்தல்: சமசமாஜக் கட்சி போட்டியிட முடிவு

கொழும்பு, ஜூன் 22

உள்ளூராட்சி, பிரதேச சபைத் தேர்தல்களில் போட்டியிட லங்கா சமசமாஜக் கட்சி திடீரென்று முடிவு செய்திருக்கின்றது.

இது எதிர்க்கட்சிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

முன்னர் சகல எதிர்க் கட்சிகளும் தேர்தல்களைப் பகிஷ்கரிப்பது என்று தீர்மானித்து இருந்தன.

சமசமாஜக் கட்சியின் இந்தத் திடீர் முடிவு வேதனை தருகின்றது. இக்கட்சியுடனுன உறவுகளைத் துண்டித்துக் கொள்ள நேரிடும் – இப்படி கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் ஒருவர் சொன்னுர். (உ-எ)

## பேச்சுக்கு வந்து---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பேச்சுக்களுக்கு வருவதாக தீவிரவாதிகளைக் கொண்டு அறிக்கை ஒன்றை விடுக்க முடியாத நிலையில் இந்திய அரசு இருக்கின்றது.

கேள்வி: டிசம்பர் 19 யோசனைகளில் ஸ்ரீலங்கா அரசு ஊசலாட்டமாக உள்ளது என்று இந்திய அரசு தொடர்ந்து கூறி வருகிறதே!

அமைச்சர்: ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்து உறுதியான நிலைப்பாட்டில் செல்கின்றது.

கூட்டணியும் மற்றும் தமிழர் அமைப்புக்களும் தான் திட்டவட்டமான யோசனைகளைச் சமர்ப்பிக்கவில்லை.

திட்டவட்டமான யோசனைகளைச் சமர்ப்பித்தது மட்டுமல்ல, சட்டமூலத்தையே ஸ்ரீ லங்கா அரசு தயாரித்து விட்டது.

கேள்வி: அப்படியானுல் ஸ்ரீலங்கா அரசு நிலையான கொள்கையுடன் இல்லை என்று இந்தியா திரும்பத் திரும்ப சொல்வது ஏன்?

அமைச்சர்: நீங்கள் இதை எனது நல்ல நண்பரான இந்தியத் தூதர் டிக்ஷிற்றிடம் தான் கேட்கவேண்டும். (உ-எ)

## தமிழர் பிரச்சினை இப்போது ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் அந்த யோசனைகளில் திடமாகவும் முரண்பாடற்றும் இருப்பார்களானுல் அந்த யோசனைகளை தெளிவான முறையில் தமிழர் குழுக்களின் முன் வைக்கலாம்.

அரசியல் ரீதியாக பிரிக்கப்பட்ட பகுதி ஒன்றிலேயே தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று தமிழர் விரும்புகின்றனர். இதை ஸ்ரீ லங்கா அரசு உணர வேண்டும்.

ஒன்பது மாகாணங்களாக பிரித்து அதிகாரப் பரவலாக்கல் செய்வது நாட்டைப் பிரிப்பது மட்டுமல்ல, பலவீனப்படுத்துவதுமாகும் என்று திருமதி பண்டாரநாயக்கா கூறியிருக்கின்ருர்.

பெரும்பான்மைச் சிங்களவருக்கு என்ற ஒரு பிரிவும் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களுக்கு என்று ஒரு பிரிவுமாக நாட்டை இரண்டு பிரிவுகளாக வகுப்பது நல்லது இல்லையா?

### தமிழர் தாயகம்

கேள்வி: தமிழர் தாயகக் கோட்பாடு, இணைப்பு-இரண்டையும் ஸ்ரீ லங்கா அரசு அங்கீகரிக்காத பட்சத்தில் பேச்சுக்களில் கலந்து கொள்ள நீங்கள் தயாரா?

பதில்: இப்படியான கோரிக்கைக்கு ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டவர்களும் வேறு சில அமைப்புக்களும் நிர்ப்பந்தம் காரணமாக சம்மதிக்கக்கூடும்,

ஆனுல் இது விடுதலைப் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்காது. பயிற்சி முகாம்களில் 4 ஆயிரம் முதல் 6 ஆயிரம் இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இரத்த ஆறு ஓடியதைக் கண்ணூரக் கண்ட இளைஞர்களும்இருக்கிருர்கள். இரத்தஆறு ஓடக்காரணமானவர்களை அந்த இளைஞர்கள் மறக்கமாட்டார்கள். அவர்கள் தொடர்ந்தும் போராடுவர்.

கேள்வி: தமிழர் தாயகக் கோட்பாட்டிற்கு இணங்காத தீர்வு ஒன்றை ஏற்றுக்கொள்ளும்படி அமைப்புக்கள் நிர்ப்பந்திக்கப்படும் என்று கூறினீர்கள். யாரால் அந்த அமைப்புக்கள் நிர்ப்பந்திக்கப்படும்?

பதில்: மத்தியஸ்தம் செய்யும் சக்திகளினுல்.

கேள்வி: ஈரோஸும் நிர்ப்பந்திக்கப்படுமா?

பதில்: புரட்சியின் தோற்றத்தை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மாசேதுங் சொன்னுர் 'புரட்சி என்பது அதனுடன் முடிவது அல்ல'– என்று.

அது ஒரு தொடர் நடவடிக்கை.

ஆகவே எமது மக்களின் சமூக பொருளாதார விடுதலைக்கான அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் வரை, எமது போராட்டம் தொடரும்.

### இந்திய ஆதரவு

கேள்வி: தமிழர் அமைப்புக்களுக்கு இந்திய அரசு தரும் ஆதரவின் அளவு குறித்து நீங்கள் மகிழ்ச்சி அடைகின்றீர்களா?

பதில்: நிச்சயமாக. புவியியல் ரீதியான அரசியல் கருத்தை நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்; உணரவும் வேண்டும்.

தமிழர் பிரச்சினை முன்னர் இனப்பிரச்சினையாக இருந்தது. பின்னர் ஸ்ரீ லங்காவின் தேசியப் பிரச்சினையானது.

நாட்டின் எல்லைக்குள் வைத்து பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரத்தில் இருப்பவர்கள் தவறியதன் மூலம் தமிழர் பிரச்சினை பிராந்தியப் பிரச்சினையாக மாற அனுமதித்து விட்டனர். இந்த அடிப்படையில் இந்தியாவின் தலையீடு 1983 இல் ஸ்ரீலங்கா அரசினுல் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

மத்தியஸ்தர் என்ற முறையில் சகல அமைப்புக்களையும் ஒன்ருகக் கொண்டுவர இந்தியா தன்னுலானதைச் செய்திருக்கின்றது.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த மத்தியஸ்தப் பணியை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டியது ஸ்ரீலங்காவிடம் தங்கியுள்ளது.

இராணுவ ரீதியில் தீர்ப்பதா? அல்லது அரசியல் ரீதியில் தீர்ப்பதா? –இதில் ஒன்றை அவர்கள் தான் தீர்மானிக்கவேண்டும்.

### இரண்டு நாடுகள் தத்துவம்

கேள்வி: வடமராட்சியில் வெற்றிகரமாக முடிந்த ராணுவ நடவடிக்கையின் பின்னர் இனப்பிரச்சினை பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளீர்கள்?

பதில்: இனப்பிரச்சினை அல்லதுபெரும்பான்மை சிறுபான்மைத் தகராறு இருப்பதாக எண்ணி நான் என்னை ஏமாற்றிக் கொள்ளவோ, குறுகிய மனப்பான்மையுடன் பார்க்கவோ விரும்பவில்லை என்பதை முதற்கண் தெரிவிக்கின்றேன்:

சரித்திர ரீதியான காரணங்கள், பலஆண்டு கால அனுபவம்— இவை ஸ்ரீலங்கா மண்ணில் இரண்டு நாடுகள் இருந்து வந்ததை ஊன்றிவிட்டது. அதுதான் சிங்கள தேசம், தமிழ் தேசம் என்பது.

சுய நிர்ணய உரிமையுள்ள தமிழ் தேசம் ஒன்றை அமைக்கவும் சுய கௌரவம், மரியாதை உடைய பிரஜைகளாக வாழும் உரிமையை உறுதிப்படுத்தவுமே நாம் இன்று போராடிக் கொண்டு இருக்கின்ருேம்.

அரசியல்ரீதியாக வரையறுக்கப்பட்டபகுதியில், இராணுவ வெறிச் சக்திகளையும் ஆயுதபடையினரையும் முறியடித்து தனித் தன்மையை நிலைநாட்ட ஆயுத ரீதியான எதிர்த் தாக்குதலில் தமிழர் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

### பொருளாதாரப் பிரச்சினை

கேள்வி: பிரச்சினை இன ரீதியானதல்லஎன்று கூறுகிறீர்கள். அப்படியானுல் பொருளாதார ரீதியானது என்று அபிப்பிராயப்படுகின்றீர்களா?

பதில்: அப்படித்தான். அடிப்படையிலேயே இது பொருளாதாரப் பிரச்சினை. முதலாளித்துவ அமைப்பில் எத்தனையோ பழங்குடிகளும் இனங்களும் தங்கள் தனித்தன்மையை இழந்து போய்விட்டன. சரித்திரம் எமக்கு இதைத் தெரிவிக்கின்றது.

உதாரணத்துக்கு கறுவாக்காட்டுத் தமிழரை பரம்பரையான கிராம, நகரப்புற தமிழர் பகுதிகளின் பிரதிநிதிகளாக கருத முடியாது.

புதிய உயர் அந்தஸ்து சிங்களவரும் இதற்கு விதிவிலக்கல்ல. (அ–எ)

## ஈழத்தமிழ் அகதிகளுக்கு தமிழகத்தில் உதவி

சென்னை, ஜூன் 22

புதுக்கோட்டை மாவட்டத்தில் தஞ்சம் அடைந்துள்ள யாழ் தமிழ் அகதிகளுக்கு இருபதினுயிரம் ரூபா பெறுமதியான பாத்திரங்கள், பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இதற்கான பணம் புதுக்கோட்டை, அறந்தாங்கி மக்களினுல் சேர்த்துக் கொடுக்கப்பட்டது.

இதைவிட சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்களும் வழங்கப்பட்டன.

முத்துக்குடா என்ற இடத்தில் தஞ்சமடைந்த 42 யாழ் தமிழ் அகதிகளுக்கு அந்த ஊரில் இயங்கும் நேரு இளைஞர் மன்றம் உணவு வழங்கி வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டக் கடலோரப்பகுதிகளில் வந்திறங்கிய 192 யாழ் தமிழ் அகதிகளில் மூக்கால்வாசிப் பேர் 15—30 வயதுக்குட்பட்டவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ–எ)

## பல்கலைக்கழக விடயம்: தெரிவுக்குழு நியமிக்க கலவான எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஜூன் 22

பல்கலைக் கழகங்களில் நிலவும் அமைதியற்ற நிலைமை பற்றி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

– இப்படி கலவான எம். பி. திரு. டியூ குணசேகரா அரசாங்கத்தைக் கேட்டிருக்கிருர்.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 22-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Monday June 22, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org